பக்கங்கள்: எட்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 26 திங்கட்கிழமை (09-06-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 192

# மாங்குளம் நோக்கி அகோர ஷெல் வீச்சு!

## 7 பொதுமக்கள் பலி! 15பேர் காயம்!!

வவுனியா, ஜூன் 9

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் நேற்று ஓமந்தையில் இருந்து மாங்குளம் நோக்கி கடும் ஆட்லறித் தாக்குதல்கள் மேற்கொண்டனர்.

15 நிமிடங்கள் தொடராக இடம்பெற்ற இத் தாக்குதல்களின் போது ஏழு அப்பாவிப் பொது மக்கள் உடல் சிதறிப் பலியாகினர். 15 பேர் காயம் அடைந்தனர்.

நேற்றுப் பகல் 1.30 மணி அளவில் இந்த ஆட்லறித் தாக்குதல்கள் ஆரம்பமாகின.

15 நிமிடத்தில் 26 ஷெல்கள் வரை மாங்குளத்தை நோக்கி ஏவப்பட்டன.

இத் தாக்குதல்களின்போது அப்பகுதி ஒரே புகை மண்டலமாகக் காட்சி அளித்தது. கடைகள் கட்டடங்கள் சேதமடைந்தன.

இறந்த ஏழு பேரில் மாங்குளத்தைச் சேர்ந்த அ.பாலச்சந்திரன் (40 வயது) என்பவரின் சடலம் மட்டுமே அடையாளம் காணப்பட்டது.

இத்த தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்து மல்லாவி நோக்கிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்களில் 14 பேரின் விவரம் கிடைத்தது.

அவர்களின் விவரம் வருமாறு:-

சுகுமார் ஜெயசுதன் (14 வயது)— துணுக்காய் வீதி, மாங்குளம்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பன்றிக்கெய்தகுளம் பகுதியிலிருந்து படையினர் மேலும் வடக்கே நகர்வு

புளியங்குளத்தின் எல்லையை ''வெற்றி உறுதி'' துருப்புக்கள் நெருங்கிவிட்டன என்று பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

ஓமந்தை ஊடாக முன்னேறும் படையணி பன்றிக்கெய்தகுளத்தில் இருந்து ஒன்றரை கிலோ மீற்றர் தூரம்முன்னேறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து நேற்று வரை 2 அதிகாரிகள் உட்பட 23 படையினர் உயிரிழந்ததாகவும் —

3 அதிகாரிகள் உட்பட 71 படையினர் காயமடைந்ததாகவும் — ரி. என். எல் தொலைக் காட்சி தெரிவித்தது.

புலிகள் தரப்பில் 72 பேர் உயிரிழந்ததாகவும் — 21 புலிகளின் சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் — ரி. என். எல். தொலைக் காட்சி மேலும் தெரிவித்தது. (இ-3-21)

## 2 படை அணிகளும் இவ்வாரம் புளியங்குளத்தை அடையலாம்

### இராணுவ அதிகாரிகள் நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 9

நெடுங்கேணியில் இருந்து முன்னேறும் 53 ஆவது படையணியும்—

ஓமந்தையில் இருந்து முன்னேறும் 55ஆவது படையணியும்—இந்த வாரம் புளியங்குளத்தில் இணைந்து கொள்ளும் என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

அதன் பின்னரே அடுத்த கட்ட நகர்வு குறித்து ஆராயப்படும் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

நெடுங்கேணியில் இருந்து நயினாமடுவை நோக்கி தற்

(8ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



இது தலையிடிக்கு தலையணையை மாத்தின கதை தான் பாருங்கோ......!

# அமைச்சரவை மாற்றம் இன்று

கொழும்பு, ஜூன் 9

அமைச்சரவை மாற்றம் இன்று இடம்பெற உள்ளது.

இன்றைய அமைச்சரவை மாற்றத்தின் போது தற்பொழுது பிரதி அமைச்சர்களாக இருக்கும் ஐவர் அமைச்சர்களாக்கப்படலாம் என்றும் —

அமைச்சர்களின் எண்ணிக்கை 23 இல் இருந்து 28 ஆக அதிகரிக்கப்படும் என்றும் — கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதி அமைச்சர்களான பேர்டி பிரேமலால், லக்ஷ்மன் கிரியல்ல, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, நந்தமித்திர எக்கநாயக்க ஆகியோரும் மற்றும் ஒரு பிரதி அமைச்சருமே அமைச்சர்களாகப் பதவியேற்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

டி.எம். ஜெயரத்தின, ஸ்ரீமானி அத்துலத் முதலி ஆகிய இருவரின் அமைச்சுக்கள் முழுமையாக மாற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கப்பலால் இறக்கியதும் ஆயுதங்கள் வன்னிக்கு!

கொழும்பு, ஜூன் 9

''வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நவீன ரக ஆயுதங்கள் கப்பலில் இருந்து இறக்கப்பட்டதும் நேரடியாக வன்னிக்கு அனுப்பப்படுகின்றன.''

'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார ஏடு அதன் வாராந்த பாதுகாப்பு கண்ணோட்டத்தில் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து கப்பல் மூலம் கொழும்பு துறைமுகத்துக்கு வந்து சேரும் 130 எம். எம். ஆட்லறி உட்பட நவீன ரக ஆயுதங்கள் உடனடியாக குருநாகல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலையான 19 பேரும். நாளை யாழ். வருகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 9

அநுராதபுரம் நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 19 பேரும் திருகோணமலையில் ஈ. பி. டி. பியின் பணிமனையில் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் 19 பேரும் இன்று திங்கட்கிழமை திருமலையில் இருந்து கப்பலில் புறப்பட்டு நாளை 10 ஆம் திகதி காங்கேசன்துறை வந்து சேர்வார்கள் என்றும் —

ஈ.பி.டி. பியின் யாழ். பணிமனைக்கு அவர்களின் பெற்றோர் அல்லது நெருங்கிய உறவினர்கள் வந்து அவர்களைப் பொறுப்பேற்குமாறும் ஈ.பி.டி.பி அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த 19 பேரின் பெயர்ப் பட்டியல் தற்பொழுது யாழ். நகரில் உள்ள ஈ. பி. டி. பி. யின் பணிமனையில் உள்ளதாகவும் —

பெற்றோர் அல்லது நெருங்கிய உறவினர்கள் இன்று வந்து பட்டியலைப் பார்வை

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மயானத்தில் இளைஞனின் சடலம் தமிழ் அமைப்பு மீது சந்தேகம்

மட்டக்களப்பு, ஜூன் 9

மட்டக்களப்பு மாவட்டம், கொக்குவில் மயானத்தில் இருந்து துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் தமிழ் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

சுந்தரமூர்த்தி (வயது 24) என்ற சத்துருக்கொண்டானைச் சேர்ந்த இளைஞனின் சடலம் இது எனப் பின்னர் அடையாளம் காணப்பட்டது. விடுதலைப் புலிகளின் உறுப்பினர் இவர் என்றும்—

கண்ணிவெடியைப் புதைக்க முற்பட்ட சமயம் இவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும்— பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இளைஞனின் கொலையில் மர்மம் உள்ளதாகவும்—

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இந்த இளைஞன் அவரது வீட்டில் இருந்து கடத்திச் செல்லப்பட்டிருந்தார் என்றும்—

இராணுவத்துடன் இணைந்த தமிழ் அமைப்பு ஒன்று இக் கொலையை செய்திருக்கலாம் என நம்பப்படுவதாகவும் — மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு பிரிகேடியரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

# கதிர்காமர்--ரணில் லண்டனில் புலிகள் பிரதிநிதிகளை சந்திப்பரா?

கொழும்பு, ஜூன் 9

தற்சமயம் லண்டனில் உள்ள வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் லண்டனில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவார்களா?

இப்படி கொழும்பில் பரவலாக பேச்சடிபடுவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் லண்டன் சென்றுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்றைக் காண்பதில் பிரிட்டனில் ஆட்சியில் இருந்த ... வெற்றி பெற்று இருந்ததன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுந்தரம் மனோன்மணி
### (இராசம்மா)

வேலணை மேற்கைச் சேர்ந்த திருமதி சுந்தரம் - மனோன்மணி (இராசம்மா) 04-06-97 இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரத்தின் அன்பு மனைவியும், ரேவதி (கனடா), தெய்வேந்திரம், காலஞ்சென்ற சின்னராசா மற்றும் நடராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும், இராசையா (கனடா), கமலாவதி, உமாராணி, புஸ்பராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (9-06-97) திங்கட்கிழமை 12.00மணியளவில் அன்னாரின்இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
நடராசா (மகன்), ரேவதி (மகள்)

வேலணை மேற்கு,
வேலணை.
(47707)

## திருமதி சவிரிமுத்து அக்னேஸ்
### (சில்லாலை)

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை சவிரிமுத்துவின் (இளைப்பாறிய ஆயர் இல்ல ஊழியர்) அன்பு மனைவி அக்னேஸ் 08-06-97இல் காலமானார்.

இவர் அல்பிறெட் யோசவ் (கொழும்பு இளைப்பாறிய ஊழியர், தபாற் திணைக்களம்), அலோஷியஸ் (இளைப்பாறிய தபால் ஊழியர், பண்டத்தரிப்பு), யோண் ஒவ் ஆக் (கனடா), புளோறி மண்ட் (கனடா), ஜெம்மா யஸ்மின் (ராணி), அருட்திரு பொன்கலன் அடிகளார் O.M.I (கனடா), பற்றிமா ராசா (இளைப்பாறிய தபால் ஊழியர், பண்டத்தரிப்பு), ஜெகநாதன் (பிரான்ஸ்), அன்ரன் பிரான்சிஸ், ஜொய்ஸி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ராணி யோசவ்
(மகள்)

387, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(47712)

## கந்தையா பஞ்சலிங்கம்
### (கோண்டாவில் கிழக்கு)

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்தவரும், ஜேர்மனியில் வசித்தவருமான கந்தையா பஞ்சலிங்கம் 5-6-97 இல் வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பொன்னுப்பிள்ளையின் அன்பு மகனும், மகேஸ்வரி(கனடா)யின் அன்புக் கணவரும், திருமதி வள்ளியம்மை கனகரட்ணத்தின் (சண்டிலிப்பாய்) மருமகனும், மதிவதனி (கனடா), பத்மவதனி (கனடா), மோகனவதனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமார் (கனடா), முத்துலிங்கம் (கனடா) ஆகியோரின் மாமனாரும், டனா, சாயினா (கனடா) ஆகியோரின் ஆசைப் பேரனும், பூபாலசிங்கம், இரத்தினம்மா, பூபதி, இராசரத்தினம், லீலாராணி, பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆதிநாதன், பரமேஸ்வரி, கந்தையா, சிவசோதி, அன்னலிங்கம், சுந்தரலிங்கம் (சண்டிலிப்பாய்), சிவபாதசுந்தரம் (கனடா), கமலேஸ்வரி (கொழும்பு), பஞ்சலிங்கம் (மானிப்பாய்), மகாலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 8-06-97 காலை 10.00 மணிக்கு வவுனியாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
க.பஞ்சலிங்கம்
(மைத்துனர்)

''தெய்வீகம்''
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.
(47708)

## சின்னத்துரை இராமநாதன்

வீமன்காமம், தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை இராமநாதன் 6-6-97 அன்று வவுனியாவில் காலமானார்.

இவர் காலஞ் சென்றவர்களான சின்னத்துரை—இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும், சந்திரவதனாவின் அன்புக்கணவரும், சுதாஜினி, கோகிலதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கந்தையா, பரமேஸ்வரி, காலஞ்சென்ற காமாட்சியம்மா, சண்முகராஜா, தங்கராணி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 6-6-97 அன்று வவுனியாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இ. பரமேஸ்வரி
(ஆச்சியம்மா)

தற்போதைய முகவரி:
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(47713)

## பெறுபேறுகள் அடுத்த வாரம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். பல்கலைக் கழகத்தில் விசேடமாக சாவகச்சேரியில் இடம்பெற்ற ஆங்கிலம் இரண்டாம் மொழி மீள் பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியாக உள்ளன என்று துணைவேந்தார் பொ. பாலசுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

இதேவேளை பட்டமளிப்பு விழாவை ஓகஸ்ட் 9 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (இ-15)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 9

பாரதி கான சபாவின் 8 ஆவது ஆண்டு விழா பூர்த்தியை முன்னிட்டு சங்கீத மும்மூர்த்தி விழா இன்று மாலை 2-30 மணி முதல் யாழ். அரசடி வீதியில் நடைபெறவிருக்கிறது.

ஆசியுரைகளும், இசை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (இ-3)

## மணிவிழா

வடமராட்சி, ஜூன் 9

வில்லிசைப்புலவர் கலா விநோதன் க. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி) யின் மணிவிழா இம்மாதம் 21 ஆம் திகதி கொழும்பு ஸ்ரீஇராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அறுபதாவது வயதான சின்னமணி நாடக, வில்லிசைக்கு ஆற்றிய சேவைகள் குறித்து மணிவிழாமலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. (இ-173)

## ஐ.நா. உதவியுடன் நுண்கருத் திட்டம்

சாவகச்சேரி, ஜூன் 9

தென்மராட்சியில் அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் தென்மராட்சி பிரதேச செயலகத்துடன் இணைந்து இந்த ஆண்டுக்கான நுண்கருத் திட்டமொன்றினைத் தொடங்கவுள்ளது.

இதனடிப்படையில் 5 லட்சத்து 98 ஆயிரம் ரூபா செலவில் கச்சாயில் தும்புக் கைத்தொழில் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

5 லட்சத்து 89 ஆயிரத்து 500 ரூபா செலவில் மறவன் புலோ பகுதியிலுள்ள சின்னத் துருவில் குளம், பெரிய துருவில் குளம், எருக்கன் குளம் ஆகிய குளங்கள் ஆழமாக்கப்படவுள்ளன. (இ-31)

## கொல் களம்

அச்சுவேலி, ஜூன் 9

அச்சுவேலி — இருபாலைப் பகுதிகளில் இறைச்சிக்காக கால்நடைகளை வெட்டுவதற்கான கொல்களங்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ளன.

பழைய கொல்களங்கள் பயன்படுத்த முடியாத இடங்களில் அமைந்திருப்பதாலேயே புதிய கொல்களங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (இ.11)

## மாணவர்களின் விசேட அ. அட்டை தேக்கம்

பாடசாலை மாணவர்களது சுமார் 2 ஆயிரத்து 500 விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படாமல் தேங்கியுள்ளதாகவும்—

அவற்றைப் பெற்று மாணவர்களுக்கு வழங்குமாறும்—யாழ்ப்பாணம் செயலக விசேட அடையாள அட்டைப் பிரிவு அதிகாரி ரி. திருலிங்கநாதன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கல்வி வலயம் ஒன்றைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் இம்மாதம் 26ஆம் திகதியும்.—

வலயம் இரண்டைச்சேர்ந்த பாடசாலை அதிபர்கள் 27 ஆம் திகதியும்—பிரதேச அடையாள அட்டைகள் வழங்கும் [illegible] பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-152)

# மரண அறிவித்தல்கள்

## நடராசா சரவணமுத்து

மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடி 685, கே. கே. எஸ் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய நடராசா சரவணமுத்து (பத்தர்) மன்னாரில் 2-6-97 இல் காலமானார்.

அன்னார் முத்துலெட்சுமியின் அன்புக்கணவரும், தீபன், தினேஷ், ஷாலினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மன்னார் எழுத்தூர் திரு. நடராசா பத்தர் தம்பதிகளின் மகனும், கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற ராசாபத்தரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மன்னாரில் கடந்த 3-6-97 இல் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
வடிவேல் - குணசேகரம்(சகலன்)
(மோட்டார் சைக்கிள் மெக்கானிக்குணா)

136, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(47704)

## திருமதி அன்னபூரணம் முத்திலிங்கப்பத்தர்

திருமதி அன்னபூரணம் முத்திலிங்கப்பத்தர் காலமானார்.

இவர் காலஞ்சென்ற முத்திலிங்கப்பத்தரின் அருமை மனைவியும், பஞ்சரட்ணம் (நெதர்லாந்து), நடராசா, நவரத்தினம், நாகேஸ்வரி, உதயகுமாரி, செல்வராணி, சந்திரகலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சந்திரா, லீலாவதி, வரதன், தியாகராசா, செல்லையா, சூரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 40/9, நாயன்மார் வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக 9-06-97 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. நடராசா
(மகன்)

இல. 40/9, நாயன்மார் வீதி,
நல்லூர்.
(47703)

## திருமதி மகாலட்சுமி கணேசலிங்கம
### ( அம்மன் வீதி, பண்டத்தரிப்பு )

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், அம்மன் வீதி பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்டு, தற்போது 456, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய திருமதி மகாலட்சுமி கணேசலிங்கம் 07-06-97 அன்று அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் கணேசலிங்கத்தின் அன்பு மனைவியும், பிறேமதாசன் (கண்ணன் - ஜேர்மனி), மாலதி (றஜிதா - திருக்குடும்ப கன்னியர்மட மாணவி A/L), சைலஜா (திருக்குடும்ப கன்னியர்மட மாணவி) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரி, முத்துராசா, காலஞ் சென்ற பூமணி, சிந்தாமணி (சரஸ்வதி), வடிவேல், ருக்குமணிதேவி, தாரணதேவி, சிவசுப்பிரமணியம், ராஜேஸ்வரி(மலர்) ஆகியோரின் அன்புச்சகோதரியும், பொன்னுத்துரை செல்லம்மா, செல்லத்துரை, காலஞ் சென்ற துரைராசா, இராசமணி, நவரத்தினம், பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07-06-97 சனிக்கிழமை மாலை நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
V. கணேசலிங்கம்
(கணவன்)

456, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(47711)

## தம்பையா சுப்பிரமணியம்
### (முன்னாள் பிரபல வர்த்தகர், பொறளை)

கந்தர்மடம் குமாரசாமி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பையா சுப்பிரமணியம் அவர்கள் 07-06-97 (சனிக்கிழமை) காலமானார்.

அன்னார் பூபதியின் அன்புக் கணவரும், புஸ்பலதா (கணக்காளர், அமெரிக்கா), மணிவண்ணன் (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (இத்தாலி), அகிலன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சிறீதரன் (கணக்காளர், அமெரிக்கா) அவர்களின் மாமனாரும், அஸ்வந்தின் பேரனாரும், காலஞ்சென்ற தம்பையா மாரிமுத்துவின் மகனாரும், உரும்பிராய் சிவகுல வீதியைச் சேர்ந்த செல்லத்துரை தம்பதியினரின் மருமகனும், கனகம்மா, கனகசபை ஆகியோரின் சகோதரரும், கனகேந்திரம் (ஆசிரியர்), சிவலிங்கம் (பொறியியலாளர், லண்டன்), சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும், ஜெகதீஸ்வரன் (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா) அவர்களின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல. 15, வைமன் வீதி, நல்லூர் இல்லத்தில் 09-06-97 திங்கள் காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி செம்பாட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:-
சு. பூபதி
(மனைவி)

இல. 15, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(47706)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா கும்பாபிஷேக வேளையில் அனர்த்தம்

# தஞ்சைப் பெரிய கோயிலில் பெரும் தீ! 60 பேர் மரணம்!!

சென்னை, ஜூன் 9

உலகின் பாரம்பரிய கலாசார சின்னங்களில் ஒன்றான தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலில் (தஞ்சைப் பெரிய கோயில்) சனிக்கிழமை இரவு இடம்பெற்ற பெரும் தீ விபத்தில் பக்தர்கள் 60 பேர் உயிரிழந்தனர். இருநூறுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

17 ஆண்டுகளின் பின்னர் நேற்று ஆலய மஹா கும்பாபிஷேகம் நடைபெறவிருந்த சமயத்தில் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

## யாகசாலை பந்தல் தீயில் எரிந்து நாசம்!

நேற்று நடைபெறுவதாக இருந்த மஹா கும்பாபிஷேகத்தை ஒட்டிய யாகசாலைப் பூசையின் நிறைவு வைபவம் இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை—சனி இரவு சுமார் 7-30 மணியளவில்—பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டிருந்த யாகப்பந்தலில் திடீரெனத் தீ பரவியது.

யாகப்பந்தலில் தீ பரவியதும் அங்கு அமர்ந்திருந்து கிரியைகளைப் பார்த்துக்கொண்டிருந்தபல நூற்றுக்கணக்கான பக்தர்கள் இருந்த இடத்தை விட்டு விழுந்தடித்துக் கொண்டு வெளியே தப்பியோட முற்பட்டனர்.

அச்சமயம் மின்சாரம் திடீரெனத் துண்டிக்கப்பட்டதால் இருளில் பெரும் சனநெருசல் ஏற்பட்டது.

அங்கும் இங்குமாக கால்போன போக்கில் ஓடிய பக்தர்கள் அவ்வாறு ஓடமுடியாது தரையில் வீழ்ந்துகிடந்த வயோதிபர்கள், பெண்கள், குழந்தைகளைக் கடந்து சென்றபோது அங்கு பெரும் களேபரம் ஏற்பட்டது. (ஐ)

தீ பரவக் காரணம்:

## பட்டாசுச் சிதறலா? மின்சார ஒழுக்கா?

தஞ்சைப்பெரிய கோயிலில் ஏற்பட்ட வரலாறு காணாத இந்தத் தீ விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாக உறுதிப்படுத்தப்படவில்லை.

தமிழக அரச அதிகாரிகள் உடனடியாகவே விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாக காவல்துறை வாட்டாரங்கள் தெரிவித்தன.

மின் ஒழுக்குக் காரணமாகவே யாகப் பந்தலில் முதலில் தீ பரவியதாக நேரில் கண்டவர்கள் கூறியதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

ஆனால் ஓரிடத்தில் கொளுத்தப்பட்ட பட்டாசின் சிதறல்கள் பறந்து வந்து யாகப் பந்தல் மீது வீழ்ந்ததால் ஓலையால் வேயப்பட்டிருந்த அந்தப் பந்தலில் திடீரெனத் தீ பற்றித் கொண்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

சம்பவம் பற்றி அறிந்ததும் அங்கு விரைந்த தீயணைப்புப் படையினர் சுமார் ஒரு மணி நேரம் போராடித் தீயைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததாக சென்னை வானொலி தெரிவித்தது. (ஐ)

## அமைச்சர்கள் சகிதம் கருணாநிதி விரைவு!

தீ அனர்த்தம் பற்றிக் கேள்விப்பட்ட உடனேயே முதல்வர் கருணாநிதி தமது அமைச்சர்கள், அதிகாரிகள் சகிதம் தஞ்சாவூருக்கு விரைந்து சென்றார்.

தமிழக மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் ஆர்காடு வீராசாமியும், பொதுப்பணித்துறை அமைச்சர் துரைமுருகனும் முதல்வருடன் அங்கு விரைந்துள்ளனர்.

தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் நலனை கவனிக்கவும், விசாரணைகளை மேற்பார்வை செய்யவும் அவர்கள் அங்கு முகாமிட்டிருப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது.

காஞ்சி பீடாதிபதி ஆலோசனையில்

## மஹா கும்பாபிஷேகம் எளிமையாக இன்று

தீ விபத்தை அடுத்து நேற்று நடைபெறுவதாக இருந்த மஹா கும்பாபிஷேகம் ஒத்தி வைக்கப்பட்டது.

பின்னர் ஆலய நிர்வாகிகள், அந்தணப் பெரியோர்கள் காஞ்சி பீடாதிபதி சங்கராச்சாரியாரைச் சந்தித்து ஆலோசனை பெற்றதைத் தொடர்ந்து மஹா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை மிகவும் எளிமையான முறையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தில் 17 ஆண்டுகளின் பின்னர் நேற்று முதன் முறையாக மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதாக இருந்தது.

## நூற்றுக்கணக்கானோர் ஆஸ்பத்திரிகளில்

சென்னை, ஜூன் 9

தீ விபத்தில் பெண்கள் சிறுவர்கள் உட்பட 36 பேர் உயிரிழந்ததாகவும் அவர்களில் 24 பேரின் கருகிய உடல்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் முதலில் அறிவிக்கப்பட்டது.

எனினும் இச் சம்பவத்தில் 60 பேர் உயிரிழந்ததாகவும், 200 க்கு மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாகவும் பீ.ரி.ஐ செய்தி தெரிவித்தது.

தீ விபத்தினாலும், ஆலய வளாகத்தில் ஏற்பட்ட நெரிசலினாலும் காயமடைந்த பல நூற்றுக்கணக்கானோர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக செய்திகள் தெரிவித்தன.

உயிரிழப்போரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

சென்னை அரச மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 37 உடல்கள ஒப்படைக்கப்பட்டன. இவர்களில் 29 பேர் பெண்கள் ஆவர். நான்கு பேர் ஆண்கள், ஐவர் குழந்தைகள். (ஐ)

## தஞ்சை நகரம் சோகத்தில் ஆழ்ந்தது

தஞ்சாவூர், ஜூன் 9

தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தில் நேர்ந்த தீ அனர்த்தத்தை அடுத்து தஞ்சை நகரப் பகுதி சோகத்தில் ஆழ்ந்து கிடக்கிறது.

தீ பரவிய செய்தி காட்டுத் தீ போல் அங்கு பரவியதும் மக்கள் தமது உற்றார் உறவினரின் கதியை அறிந்து கொள்ள விழுந்தடித்துக் கொண்டு ஆலயப் பகுதிக்கு விரைந்தனர்.

ஆலய வளாகத்தில் ஏற்கனவே ஏற்பட்ட சன நெரிசல் இதனால் மேலும் மோசமடைந்தது.

தஞ்சை நகரில் உள்ள சிறு மருத்துவ மனைகள் அனைத்தும் காயமடைந்தவர்களால் நிரம்பி வழிந்தன.

தமது உறவினர் நிலை அறிய மக்கள் அழுது கதறிய வண்ணம் ஆஸ்பத்திரிகளின் முன்னால் திரண்டு காணப்பட்டனர். (ஐ)

## ஆலயக் கட்டமைப்புக்கு ஊறு ஏதும் இல்லை

சென்னை, ஜூன் 9

தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தில் ஏற்பட்ட பெரும் தீ அனர்த்தத்தினால் ஆலயத்தின் கட்டடத் தொகுதிகளுக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தஞ்சாவூர் பொலீஸ் அதிகாரி தெரிவித்தார்.

யாகப் பந்தல் மட்டுமே தீயினால் முற்றாக எரிந்து நாசமானதாகவும் ஆலயத்தின் கட்டமைப்பை தீ பாதிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆலய மண்டபத்தின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்ததாக முதலில் வெளியான உறுதிப்படுத்தப்படாத தகவல் ஒன்று தெரிவித்தது.

1003 ஆம் ஆண்டில் தமிழ் மன்னன் இராஜராஜ சோழனால் கட்டப்பட்ட இந்த ஆலயம் தென்னிந்தியாவில் உள்ள மிகத் தொன்மையான இந்துமத தலங்களில் பிரசித்தி பெற்றதாகும்.

ஐ.நா. கலை கலாசாரத்துறை அமைப்பான 'யுனெஸ்கோ' அண்மையில் இந்த ஆலயத்தை உலக பாரம்பரிய சின்னமாகப் பிரகடனப்படுத்தியிருந்தது. (ஐ)

ஆபிரிக்க நாடான

## காங்கோ தலைநகரில் கடும் துப்பாக்கிச் சமர்

பிரெஸ்ஸவில், ஜூன் 9

ஆபிரிக்க நாடான காங்கோவின் தலைநகர் பிரெஸ்ஸவில்லில் கலவரங்கள் வெடித்துள்ளன.

உலக அரங்கில்

முன்னாள் இராணுவ ஆட்சித் தலைவர் சசு என்குவேசோவின் 'நாகபாம்புப்படையினரும், அரச இராணுவத்தினரும் கடும் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டுவருகின்றனர்.

தலைநகரில் உள்ள சர்வதேச விமானத் தளத்தைக் கைப்பற்ற ''நாகபாம்புபடைகள்'' முயற்சிப்பதாக அறிவிக்கப்படுகிறது. (ஐ)

## பங்களாதேஷில் மீண்டும் புயல்

பங்களாதேஷில் சில பகுதிகளைத் தாக்கிய கடும் புயலினால் 11 பேர் பலியாகியுள்ளனர். 50-க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்பட்டது. (ஐ)

## குஜ்ரால் அதிர்ச்சி

சென்னை, ஜூன் 9

தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் ஆலயத்தில நேர்ந்த பெரும் தீ அனர்த்தம் குறித்து இந்தியப் பிரதமர் ஐ. கே. குஜ்ரால் பெரும் அதிர்ச்சியும, கவலையும் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அவர் தனது அனுதாபங்களையும் வெளியிட்டுள்ளார். (ஐ)

## இந்தியா ஊடாக தரைப்பாதை

கார்ட்மண்டு, ஜூன் 9

நேபாளத்தில் இருந்து பங்களாதேஷ் நாட்டு துறைமுகங்களை இலகுவில் சென்றடையக் கூடியதரைப்பாதை ஒன்றை வட இந்தியாவின் ஊடாகத் திறப்பதற்கு இந்திய 'அரசு' சம்மதித்துள்ளது.

நேபாளத்துக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் ஐ. கே. குஜ்ரால் அந்நாட்டு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் இந்த தரைப்பாதை திறக்கும் இணக்கம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவின் இச் செயலானது நேபாளத்தின் வெளிநாட்டு வியாபார நடவடிக்கைகளுக்கு வரப்பிரசாதமாக அமைகிறது.

## காங்கிரஸ் தேர்தல் இன்று

புதுடில்லி, ஜூன் 9

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது.

தற்போதைய தலைவர் சீதாராம் கேசரியை எதிர்த்து முக்கிய காங்கிரஸ் பிரமுகர்களான ராஜேஸ் பைலட்டும், சரத் பவாரும் போட்டியிடுகின்றனர்.

சீதாராம் கேசரிக்கும், சரத் பாவருக்கும் இடையே கடும் போட்டி இருக்கும் என்று அவதானிகள் தெரிவித்தனர். (ஐ-7)

## பிரிட்டனில் எதிர்க்கட்சி தேர்தல்

லண்டன், ஜூன் 9

அண்மையில் நடந்த பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்த பிரிட்டனின் கொன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவரைத் தெரிவு செய்வதற்கான முதற்கட்ட வாக்களிப்பு நாளை நடைபெறவுள்ளது.

தற்போதைய கட்சித் தலைவர் ஜோன் மேஜர் இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை. (ஐ)

## சீனா மீது குற்றச்சாட்டு

ஜனநாயக உரிமைகள் கேட்டு 1989 இல் சீனாவின் தியனன்மென் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்களைக் கொன்று குவித்த சம்பவத்தை சீன அரசு இன்னும் அதிகார பூர்வமாக ஒப்புக் கொள்ளவில்லை என்று மனித உரிமைக் குழு ஒன்று குற்றஞ்சாட்டியுள்ளது. (ஐ)

## பொருளாதார கூட்டமைப்பு உதயம்

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், தாய்லாந்து ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பு ஒன்றை அமைத்துள்ளன.

தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிடையே வர்த்தக முதலீட்டுத் திட்டங்களை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல கண்டங்களைத் தாண்டும் இக்கட்டான கட்டத்தில்தீர்வுப்பொதி!

கொழும்பிலிருந்து வெளிவரும் ''புதிய பூமி'' மாதப் பத்திரிகையின் 1997 மே இதழில் ''வெகுஜனன்'' எழுதிய கட்டுரை இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகிறது.

அரசாங்கம் பதவிக்கு வந்து இரண்டரை வருடங்கள். அரசியல் தீர்வுப்பொதி அவிழ்க்கப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் தெரிவுக்குழு அமர்வுகளில் இருந்து எழும்பியது அறுபத்தெட்டு தடவைகள். தமிழ்க் கட்சிகள் தமக்குள்ளும் ஏனைய கட்சிகளுடன் கலந்து பேசியுள்ளமை பல பத்துத் தடவைகள். இந்தியா முதல் இங்கிலாந்து வரை ஐரோப்பா தொட்டு அமெரிக்கா வரை தீர்வுத்திட்டப் பொதிக்கு பலத்த பாராட்டுக்கள். ஆனால் இத் தீர்வுப்பொதி இதுவரைக்கும் திட்டவட்டமான அரசியல் தீர்வுத் திட்டமாக உருப்பெறவில்லை. தீர்வுப் பொதி அடுத்து எவ்வாறு நகர்த்தப்படப் போகின்றது என்பது புரியாத புதிராகவே இருந்து வருகின்றது.

அரசாங்கம் பதவிக்கு வந்து ஒரு வருட காலதாமதத்திற்குப் பின்பே தீர்வுப் பொதி அவிழ்த்து வைக்கப்பட்டது. ஆரம்ப நிலையில் அப்பொதியிடையே இனப்பிரச்சினைக்குரிய சில அடிப்படை அம்சங்கள் காணப்பட்டன. அதில் நீக்க வேண்டியவற்றை நீக்கி பயனுள்ள வகையில் சேர்க்க வேண்டியவற்றைச் சேர்த்து கொள்வது அவசியம் என நியாயமான தீர்வை விரும்பியோர் வற்புறுத்தினர். ஆனால் அதற்கு எதிர் மாறாக உள்ளவற்றிலிருந்து சில அம்சங்கள் வெட்டிக் குறைக்கப்பட்டன. ஏன் இவ்வாறு வெட்டிக் கொள்ளப்பட்டன என்பதற்கு எவ்வித விளக்கமும் இல்லை. ஒரே காரணம் பேரினவாத சக்திகளுக்கு அடிபணிந்து கொண்டமைதான். தீர்வுப்பொதி நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் ஆராயப்பட்டு வருவதுடன் பெரும்பாலானவற்றில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாக மட்டும் கூறப்படுகிறது.

**இன்னும் தொடவில்லை**

அதேவேளை முக்கியமான சில விடயங்கள் இன்னும் தொடப்படவே இல்லை- வடக்கு-கிழக்கு இணைப்பும், எல்லைகள் வரையறுப்பும், காணிப் பகிர்வின் அதிகாரம், முஸ்லீம் மக்களுக்கான அதிகார அலகு போன்றவற்றில் பெரும் வாதங்களுக்கும் இழுபறிகளுக்கும் இடம் உண்டு.

ஒட்டு மொத்தமாகத் தீர்வுப் பொதி உரிய தீர்வுத் திட்டமாகி நடைமுறைக்கு வருவதற்கும் பல கண்டங்களைத் தாண்ட வேண்டியே உள்ளது. மேற்கூறியவற்றில் தெரிவுக் குழுவில் இணக்கம் காணப்படுவது முதலாவது கண்டம். இதனைத்தாண்டி நாடாளுமன்றத்தில் அது நிறைவேற்றம் பெறுவது என்பது இரண்டாவது கண்டம்.

அவ்வேளை தெற்கில் பேரினவாதத்தால் கிளப்பி விடப்படும் இனவாதத்திற்கு முகம் கொடுப்பது மூன்றாவது கண்டம். நிறைவேற்றம் பெற்றாலும் அதனை விடுதலைப் புலிகள் ஏற்குமாறு செய்யப்படுவது நான்காவது கண்டம். புலிகள் ஏற்றாலும் ஏற்காது விட்டாலும் நடைமுறைப் படுத்துவது என முடிவு செய்யப்பட்டால் அத்தனை முன்னெடுப்பது ஐந்தாவது கண்டம். இப்படியாக மேலும் பல கண்டங்களைத் தாண்ட வேண்டிய நிலையிலேயே அரசியல் தீர்வுப் பொதி இருக்கிறது.

எதிர்வரும் நவம்பர் மாதத்திற்கு முன்பாக அரசியல் அமைப்புக்கான நகல் வரைவினை தீர்வுத்திட்டத்தை உள்ளடக்கியதாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளதாக அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கூறிஉள்ளார். அதற்கான முயற்சியில் அவர் ஈடுபடவும் செய்கிறார்.

**விரைவுபடுத்த அக்கறை இல்லை**

ஆனால் அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளர்களாகச் செயற்படுவோரில் ஒரு பகுதியினர் தீர்வுத்திட்டத்தை விரைவுபடுத்துவதில் அக்கறை செலுத்துவதாகக் காணப்படவில்லை. அரசாங்கம் பதவிக்கு வந்து மூன்று வருடங்களை அண்மிக்கிறது. ஜனாதிபதிப் பதவியுடன் எஞ்சிய காலப் பகுதியையும் ஒருவாறு உருட்டிச் சென்று விடலாம் என்றே அவர்கள் கருதுகிறார்கள். எப்படியும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விடுவோம் என்று ஜனாதிபதி அடிக்கடி கூறி வருகின்றபோதிலும் நடைமுறையில் அதற்கான செயற்பாடுகள் மந்தகதியில் தான் இடம் பெறுகின்றன. அதே வேளை பல்வேறு நெருக்கடிகளையும் அரசாங்கம் சந்தித்துக் கொண்டே இருக்கிறது.

**அமெரிக்கா முடிவு செய்யும்?**

இனப்பிரச்சினையின் தீர்வில் இரு பெரும் கட்சிகளும் ஓர் இணக்கப்பாட்டுடன் செயற்படுவது என பிரித்தானிய பிரதி அமைச்சர் லியம் பொக்சினால் இணங்க வைக்கப்பட்டுள்ளது. பிரித்தானியாவின் இம் முயற்சிக்குப் பின்னால் மேற்கு நாடுகளும் அமெரிக்காவும் நிற்பது புலனாகிறது.

## ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வண்டியின் நிலையிலேயே அது!

இதனை நோக்குகையில் இலங்கை அரசாங்கம் மேற்குலகின் ஆதரவோடும் அமெரிக்காவின் வழி காட்டலுடனும் நெருக்கமாகிக் கொள்வதை அவதானிக்க முடிகிறது. இந்திய அரசாங்கம் இலங்கை விடயத்தில் கடைப்பிடித்து வரும் தூர நின்று கொள்ளும் போக்கினை அமெரிக்கா தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு இலங்கைக்குள் செல்வாக்கைச் செலுத்த முனைகிறது.

ஒரு புறத்தில் புலிகள் இயக்கத்தின் போராட்டத்தைப் பயங்கரவாதம் எனச் சுட்டிக் காட்டி அதற்கு எதிரான யுத்தத்திற்கு சகலவித உதவி ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது அமெரிக்கா.

அதேவேளை மறுபுறத்தில் பிரித்தானியா மூலம் இரு கட்சி இணக்கப்பாட்டையும் தோற்றுவித்துள்ளது, இவை யாவும் இறுதியில் இனப்பிரச்சினை எந்தத் திசையில் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்பதைத் தீர்க்கமாகத் தீர்மானிக்கும் பொறுப்பைத் தனது கைகளில் அமெரிக்கா எடுத்துக் கொள்ளப் போகிறதா என்னும் பலத்த சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

**மக்கள் எதிர்பார்ப்பு**

இந்நிலையில் அரசியல் தீர்வுப் பொதியின் எதிர்காலம் எப்படி அமையப் போகிறது என்பது முக்கியமானதாகும். தீர்வுப் பொதி உரிய தீர்வுத் திட்டமாக்கி அதனைப் புலிகள் இயக்கத்துடனான பேச்சுவார்த்தைக்கு முன் வைத்து ஒரு குறைந்த பட்சத் தீர்வுதானும் காணப்படும் என்றே மக்கள் எதிர்பார்த்து வந்துள்ளனர். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நடப்பது நல்லதாக நடந்திட வேண்டும் என்ற பிரார்த்திப்புடனேயே மக்கள் இருந்து வருகின்றனர். அந்தளவிற்கு தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவருமே யுத்தத்தால் வெறுப்பும் வேதனையும் விரக்தியும் அடைந்துள்ளனர்.

ஆனால் மக்களது ஆழ்ந்த எதிர்பார்ப்புக்குப் பதிலாக தீர்வுப் பொதியைப் பெயரளவிற்கு காட்டிக் கொண்டு வேறு ஏதோ ஏதோ எல்லாம் திரை மறைவில் எடுத்தாளப்படுகின்றன. குறிப்பாக யுத்தத்தை பாரிய அளவில் முன்னெடுக்கும் முன் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் இலங்கையும் அமெரிக்காவும் இணைந்து ஹவாயில் ஓர் இராணுவ முகாமைத்துவக் கருத்தரங்கை நடத்தியுள்ளமை கவனத்திற்குரியதாகும். நாற்பது வரையான பசிபிக் பிராந்திய இராணுவங்களுடன் உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட இக் கருத்தரங்கில் பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுவது பற்றியே விவாதிக்கப்பட்டது.

**ரத்வத்தையின் வேண்டுகோள்**

இக் கருத்தரங்கில் ஆரம்ப உரை நிகழ்த்திய நமது நாட்டின் பாதுகாப்புப் பிரதியமைச்சர் ஜெனரல் அனுரத்த ரத்வத்தை இருபத்தியோராம் நூற்றாண்டில் பயங்கரவாத நோய்க் கிருமிகளை முற்றாகத் துடைத்தெறிய வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனை உற்று நோக்கும் போது இனப்பிரச்சினைக்கு உரிய அரசியல் தீர்வுகாணப்படுவதற்குப் பதிலாகப் பயங்கரவாத ஒழிப்பு என்னும் பெயரில் யுத்தம் விரிவுபடுத்தப்படப் போகிறது என்பதையே ஊகிக்க முடிகிறது.

இவை ஒருபுறமிருக்க தீர்வுப் பொதிக்கு எதிராகப் பேரினவாத சக்திகள் தமது தீவிர எதிர்ப்பைக் காட்டி வருகின்றன. பௌத்தபீடாதிகள் மூலமாகவும் சிங்கள ஆணைக்குழு முன்னிலையில் அளிக்கப்படும் சாட்சியங்கள் மூலமும் தீர்வுப் பொதி திட்டித் தீர்க்கப்படுகிறது. தற்போது இப் பேரினவாதப் பிரசாரத்துடன் தம்மை இடதுசாரிகள் எனக் கூறிக் கொள்ளும் ஜே.வி. பியினரும் இணைந்துள்ளனர். அவர்கள் தீர்வுப் பொதியை ஒரு மரணப் பொதி என வர்ணித்து அதனால் நாடு பிளவுபடப் போகிறது என்னும் பிரசாரத்தை சிங்கள மக்கள் மதியில் முன்தள்ளிவருகின்றனர்.

நடந்து முடிந்த தேர்தல்களில் சிறிதளவு ஆதரவு ஜே. வி. பியினருக்குகிடைத்துள்ளது. அதனைவைத்து அடுத்தகட்ட வளர்ச்சிக்கு முன்செல்ல அவர்கள் முனைவது இயல்பானதேயாகும். ஆனால் இனவாதத்தைத் கக்கிக் கொண்டு தமது வளர்ச்சியைத் தேட முற்படுவதுதான் அபத்தமாக உள்ளது.

**முக்கிய கேள்வி**

இவை இவ்வாறிருக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தீர்வுப்பொதியைஒரு ஏமாற்றுமுயற்சி எனத்தமது பிரசாரசாதனங்கள் மூலம் கூறி வருகின்றன, அத்துடன் வெளிநாட்டு மத்தியஸ்தத்துடன் தான் ஒரு பேச்சுவார்த்தை இடம்பெறவேண்டும் எனவும் வற்புறுத்தி வருகின்றனர்.

அதேவேளை ஏனைய தமிழ்க் கட்சிகள் அமைப்புகளிடையே தீர்வுப்பொதி பற்றிய ஒருமுகத் தீர்மானம் ஏற்படவில்லை. அதே போன்று முஸ்லிம் கட்சிகளுக்கிடையிலும் -தமிழ் முஸ்லிம் கட்சிகளுக்கிடையிலும் ஒரு திட்டவட்டமான தீர்மானம் தீர்வுப் பொதிபற்றி ஏற்படவில்லை.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வெறும் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதே தவிர தீர்வுப்பொதியில் கூறப்பட்டவற்றுக்கு ஆதரவு தெரிவிப்பதாக இல்லை.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பொதி (அதனுள் காணப்படும் தீர்வுத்திட்ட யோசனைகளும்) திட்டவட்டமான திசைவழியை எடுக்கமுடியாத நிலையில் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வண்டி போல் நிற்கிறது. தீர்வுப் பொதி தீர்வுத் திட்டமாகி நிறைவேறுமா என்பது பல்வேறு கோணங்களில் கேள்வி எழுப்பும் அதேவேளை, அது தமிழ் முஸ்லிம் மக்களின் அடிப்படை அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவையாக அமைந்திடுமா என்பது மிக முக்கிய கேள்வியாகும். ★

---

## கூட்டுறவு தின விழாவை ஒட்டி கோட்ட ரீதியில் போட்டிகள்

யாழ். மாவட்ட கூட்டுறவு சபை நடத்தும் சர்வதேச கூட்டுறவாளர் தின விழா அடுத்த மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்விழாவை முன்னிட்டு கோட்ட ரீதியில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இன்று திங்கட்கிழமை தீவகக் கோட்டத்திலும், நாளை வடமராட்சிக் கோட்டத்திலும், நாளை மறுதினம் தென்மராட்சிக் கோட்டத்திலும், 12 ஆம் திகதி வலிகாமம் மேற்கு கோட்டத்திலும், 13 ஆம் திகதி வலிகாமம் கிழக்கு கோட்டத்திலும் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை மேற்படி ஐந்து கோட்டங்களிலும் கூட்டுறவு தின விழாக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கோட்ட மட்டத்திலான போட்டிகளை அடுத்து இம் மாதம் 27 ஆம் திகதியன்று மாவட்ட மட்ட போட்டி இடம்பெறவுள்ளன.

இதே வேளை சகல கூட்டுறவுச் சங்கங்களினதும், கூட்டுறவு நிறுவனங்களினதும் வளவுகளில் அடுத்த மாதம் 4 ஆம் திகதி மர நடுகை விழாவும் இடம்பெறும். (ஐ-135)

## இந்து வாலிபர் சங்கம் புனரமைப்பு

யுத்தகால அனர்த்தங்களை அடுத்து இயங்காமல் இருந்த பண்டத்தரிப்பு பிரதேச இந்து வாலிபர் சங்கத்தை புனரமைப்பு செய்து மீண்டும் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ஐ-135)

## தமிழ் ஆசிரியர் தெரிவில் பண்டிதருக்கு முன்னுரிமை

### கல்விப் பணிப்பாளர் யோசனை

யாழ்ப்பாணம், ஜூன் 9

தமிழ்மொழி கற்பிப்பதற்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்யும்போது பண்டிதர், பாலபண்டிதர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். அப்போது தான் மாணவரிடம் தமிழ்த்தரம் குறைந்து வருவதை நீக்கலாம்.

இவ்வாறு தெரிவித்தார் கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் சு. இரத்தினராசா.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கத்தின் அமைப்பு விதிகளைத் திருத்தும் கூட்டம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நல்லை ஆதீனத்தில் இடம்பெற்ற பிரஸ்தாப கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இக் கூட்டத்திற்கு தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அதிவண. எஸ். ஜெபநேசன் தலைமை வகித்தார்.

கல்விப் பணிப்பாளர் தமது பேச்சில் மேலும் குறிப்பிட்டதாவது:-

இன்று பாடசாலைகளிலே தமிழ் கற்பிக்கும் திறன் படைத்த ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த சாதாரண தரப் பரீட்சையிலே தமிழ்ப்பாடத்திலே சித்தி பெற்றோர் எண்ணிக்கை திகைப்பைத் தருமளவிற்கு மிகக் குறைவாக உள்ளது. இது தமிழாசிரியர் பற்றாக்குறையின் வெளிப்பாடேயாகும். எனவே தமிழை முறையாக வரன் முறைப்படி கற்றுத்தேர்ந்த பண்டிதர், பாலபண்டிதர்களுக்கு இடைநிலை வகுப்புக்களிலே தமிழ் கற்பிக்க வாய்ப்பளித்தால் மட்டுமே இந்தக் குறைபாட்டை நீக்கலாம் ஆகையால் தமிழ் மொழி கற்பிப்பதற்கு ஆசிரியர்களை தெரிவு செய்யும் போது பண்டிதர், பாலபண்டிதர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மன்னாரில் பயணிகள் அதிகரிப்பு
# 'தராகி' கப்பல்சேவை நீடிக்கப்படும்

திருகோணமலை, ஜூன் 9
காங்கேசன்துறைக்கும் — மன்னாருக்கும் இடையே கடந்த சில வாரங்களாகச் சேவையில் ஈடுபட்டு வரும் ''தராகி'' கப்பலைத் தொடர்ந்து அச்சேவையில் நீடிப்பது தொடர்பாக அதிகாரிகள் மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

வன்னிப் பகுதியில் இருந்தும் வவுனியாவில் இருந்தும் வவுனியா மன்னார் வீதி ஊடாக மன்னாருக்குச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கை கடந்த சில நாள்களாக அதிகரித்துள்ளது என்றும் —

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்காகப் பெரும் எண்ணிக்கையானோர் அங்கு காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே மன்னார் — காங்கேசன்துறை கப்பல்சேவையைத் தொடர்ந்து நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதனால் 'தராகி' கப்பலின் சேவைக்காலத்தை மேலும் நீடிப்பது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

இதேவேளை -

வவுனியாவில் இருந்து திருமலைக்கு வரும் இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை கடந்த சில நாள்களாகப் பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளது. (ஐ-150)

## வீதியில் மீண்டும் போக்குவரத்து

திருநெல்வேலி, ஜூன் 9
யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு முன்பாகவுள்ள வீதி பொது மக்களின் போக்குவரத்திற்காகத் திறந்து விடப்பட்டுள்ளது. இதுவரை காலமும் பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் அரசாங்க ஊழியர்களே இவ்வீதி வழியாக போக்குவரத்து செய்ய அனுமதிக்கப்பட்டு வந்தனர். (ஐ-135)

## கருத்தரங்கும் சிரமதானமும்

திருநெல்வேலி, ஜூன் 9
டெங்கு காய்ச்சல், நுளம்பு ஒழிப்புவார கருத்தரங்கும் சிரமதானமும் காரைநகரிலுள்ள ஆறு பாடசாலைகளில் அண்மையில் நடத்தப்பட்டன.

காரைநகர் அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். அம்பிகைபாலன், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொறுப்பதிகாரி து. மகாதேவன் ஆகியோர் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். (ஐ-135)

## கமநல நிலையங்களுக்கு உழவு இயந்திரம்

யாழ். மாவட்டத்தில் உள்ள கமநல சேவைகள் கேந்திர நிலையங்களுக்கு வழங்குவதற்கென 8 உழவு இயந்திரங்கள் கப்பல்மூலம் விரைவில் எடுத்துவரப்பட உள்ளன.

கொழும்பிலுள்ள கமநல சேவைகள் கேந்திர நிலையத்தின் தலைமை அலுவலகம் இந்த உழவு இயந்திரங்களை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. (ஐ-5)

## புதிய அதிபர் நியமனம்

கந்தரோடை ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் அதிபராக க. சிவாஜி நியமிக்கப்பட்டுள்ளார். இங்கு முன்னர் அதிபராக கடமையாற்றிய ஆ. கமலநாதன் தெல்லிப்பழை கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று சென்றதைத் தொடர்ந்து அங்கு உப அதிபராக கடமையாற்றிவந்த இவர் புதிய அதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ஐ-152)

## கணனி மயமாக்கப்பட்ட அ. அட்டைகள்

மூன்று மொழிகளிலும் விவரங்கள் அடங்கிய கணனி மயமாக்கப்பட்ட அடையாள அட்டைகளை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தை தெரிவித்துள்ளார் (ஐ-4)

## தீக்காயம்

அருகில் இருந்த அரிக்கேன் விளக்கு தட்டுண்டு உடையில் தீப்பற்றியதில் படுக்கையில் இருந்த இளம்குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

நவாலியில் நேற்று முன்தினமிரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் தெல்லிப்பழையில் இருந்து இடம் பெயர்ந்த ஈஸ்வரன் லஜனி(வயது 21) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

# மக்கள் மீளக்குடியமர வசதியாக வலி. தெற்கில் துப்புரவுப்பணி

வலிகாமம் தெற்கு, ஜூன் 9
வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்த வீடுகளுக்கு சென்று குடியிருக்க இராணுவத்தினர் அனுமதி அளித்துள்ளனர்.

இராணுவத்தினரின் இந்த அனுமதியைத் தொடர்ந்து மீளக்குடியமர்தலுக்கு வேண்டிய நடவடிக்கைகள் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக ஏழாலை, குப்பிளான், புன்னாலைக் கட்டுவன் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தத்தம் வீடுகளை விட்டு வெளியேறி பல இடங்களிலும் அகதிகளாகத் தற்காலிகமாக வாழ்ந்து வருகின்றனர்.

ஏழாலைமேற்கு, ஏழாலை வடக்கு, புன்னாலைக் கட்டுவன் வடக்கு குப்பிளான் வடக்கு ஆகிய கிராமசேவையாளர்களின் நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்குள் இடம்பெயர்ந்த மக்களை மீளவும் தத்தம் இடங்களில் சென்று வாழ கடந்த வாரம் இராணுவ அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

மக்கள் மீளக்குடியமர்வதற்கு முன்னர் அப்பகுதிகளில் பல சிரமைப்பு வேலைகளை வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

பற்றைகளாக காணப்படும் வீதிகள், ஒழுங்கைகள் வளவுகள் யாவும் துப்புரவு செய்யும் பணியினை செயலகம் தற்போது மேற்கொண்டிருக்கின்றது.

சீரமைப்பு வேலைகள் யாவும் முடிவடைந்தவுடன் மேற்படி பகுதிகளில் மீளக்குடியமர விண்ணப்பித்த மக்களை அங்கு சென்று மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர் என உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார். (ஐ-152)

## விபத்தில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியில் நேற்றும், நேற்று முன்தினமும் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள் விபத்துக்களில் மூவர் படுகாயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணிக்கு இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் சைக்கிளை ஓட்டிச் சென்ற காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த முருகேசு பூபாலதுரை (வயது 58) என்பவர் தலையில் படுகாயமடைந்தார். இவர் சுயநினைவிழந்த நிலையிலே காணப்படுகிறார்.

கோண்டாவில் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற சங்கானையைச் சேர்ந்த நடராசா திலீபன் (வயது 14) பின்னால் இருந்து சென்ற கோண்டாவிலைச் சேர்ந்த கதிர்காமநாதன் ஜெயசீலன் (வயது 16) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர். இவர்கள் அனைவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-15)

# வேதாந்த அறிவுடையோரை சமய ஆசிரியராக நியமிக்கவேண்டும்

## துணைவேந்தர் யோசனை

நல்லூர், ஜூன் 9
யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் வளரக்காரணமாக இருந்தவர்கள் ஆசிரியர்கள். இன்றே இங்கு மட்டுமன்றி மத்திய மலையகத்திலும் கூட இந்துமதத்தைப் போதிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை. வேதாகமங்கள் சித்தாந்தங்களில் புலமை பெற்றவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

'இந்துதர்மம்'(மு. ஞானப்பிரகாசம் சிறப்பிதழ்) மலர் 13 வெளியீட்டு விழாவில் தொடக்கவுரை நிகழ்த்திய யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு கூறினார்.

இந்து தர்மம் மலர் வெளியீட்டுவிழா அருட்கவி சி. விநாசித்தம்பி தலைமையில் கைலாசபதி கலையரங்கில் கடந்த மாத இறுதியில் நடைபெற்றது.

துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை அங்கு தொடர்ந்து பேசும் போது மேலும் கூறியதாவது:-

மௌலவிகள் பௌத்த குருமார்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். இது போன்று எமது மதத்தைப் போதிப்பதற்கும் சித்தாந்தம், வேதாந்தம் கற்றவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

சைவப் பெரியார் மு. ஞானப்பிரகாசம், திருக்கேதீஸ்வர ஆலயப் பணிகளிலும் பரமேஸ்வரன் ஆலயத்திலும்பரமேஸ்வராக்கல்லூரியிலும் தன்னுடைய சேவைகளினூடாக சைவத்தையும் தமிழையும் வளர்த்தவர். 1960-ம் ஆண்டுக்குமுன் இங்குள்ள கல்லூரிகள்ஒவ்வொன்றும் திருக்கேதீஸ்வரத்தில் உற்சவங்களைச் செய்துள்ளன. இன்றே 'எமது ஆலயங்கள் புனிததீர்த்தங்கள் எல்லாம் மூடப்பட்டுக் கிடக்கின்றன. இவற்றைத் திறப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அவை பயனளிக்கவில்லை இந்நிலை மாற வேண்டும்.

சைவசித்தாந்தத்திற்கென எமது பல்கலைக்கழகத்தில் ஓர் அறக்கொடை உண்டு. பேராசிரியர் பதவி இருந்தும் இதுவரை அது நிரப்பப்படவில்லை — என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் பேசும் போது கூறியதாவது:-

சைவத்தையும் தமிழையும் தனதெனக் கொண்டு தொண்டாற்றிய பெரிய மனிதர் ஞானப்பிரகாசம் பேச்சையும் செயலையும் ஒன்றாகச் செய்தவர். சமயத்துடன் மட்டுமன்றிச் சமூக முன்னேற்றம், வேதாகமங்களில் ஆய்வு என்பவற்றுடன் புராண படனங்களை வளர்த்து அதனூடாகப் பண்டிதர்களையும் பெரும் அறிஞர்களையும் நமக்களித்தவர்.

பரமேஸ்வராக்கல்லூரி பல்கலைக்கழகமாக மாறவேண்டும் எனவும் பரமேஸ்வரன் ஆலயத்தைச் சிறப்புற ஆக்க வேண்டுமெனவும் [illegible]டவர்; அவர் விதைத்த விதைகள் பலமாக இருக்கின்றன. தமிழகத்தில் உள்ள ஆதீனங்கள் கூட அவரை நினைவு கூரத்தக்க வகையில் அவரது பணிகள் அமைந்திருந்தன. அவரது சாதனைகளை மனதிருத்தி அவரைப்போல் வாழ நாமும் பழகிக் கொள்ள வேண்டும் — என்றார்.

பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ணன் தமது நூல்வெளியீட்டுரையில் கூறியதாவது:

எமது சமயத்திற்கு நிறுவன ரீதியான அமைப்புத் தேவை என்பதைப் புரிந்து கொண்டு பரமேஸ்வராக் கல்லூரி, பரமேஸ்வரன் ஆலயம் திருககேதீச்சர ஆலயங்கள் ஊடாக பெரியார் ஞானப்பிரகாசம் சமய வளர்ச்சிக்கு பணிபுரிந்தார். பரமேஸ்வராவின் வரலாற்றை எழுதும் பட்சத்தில் அவர் எமது மதத்திற்கு ஓர் அடித்தளமாக விளங்கியவர் என்பது புலப்படும். இந்த மலரின் ஊடாக அவரது சிந்தனைகள் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவரைப்பற்றிச் சிந்திக்க ஒரு சிறந்த இதழாக இந்துதர்மம் வெளிவந்துள்ளது — என்றார்.

யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், பண்டிதர் மு. கந்தையா திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், சி. சக்திகிரிவன், சு. சிவபாலன் ஆகியோரும் பேசினார்கள். மலரின் முதற் பிரதியை [illegible] ராசா பெற்றுக் கொண்டார். (அ - 105)

# செம்பியன்பற்று - மந்திகை பஸ் சேவை நிறுத்தம்

## பயணிகள் பெரும் சிரமம்

செம்பியன்பற்று, ஜூன் 9
செம்பியன்பற்றில் இருந்து மந்திகைக்கு நடத்தப்பட்டு வந்த ஒரேயொரு பஸ்சேவையும் அண்மையில் நிறுத்தப்பட்டதை அடுத்து வடமராட்சி கிழக்குப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் இங்கிருந்து மந்திகை ஆஸ்பத்திரிக்கும், வேறு தேவைகளுக்கும் செல்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு நாளாந்தம் வரும் ஆசிரியர்கள், அரச திணைக்கள ஊழியர்களும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

## பெண் காயம்

குப்பிவிளக்கு தட்டுண்டு உடையில் தீப்பற்றி எரிந்ததால், நித்திரையில் இருந்த குடும்பப்பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

வடக்கு புன்னாலைக்கட்டுவனில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்லக்குட்டி ஞானமலர் (வயது 37) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

# சமய சந்நிதிகளில்

வடக்கு—மண்டுவில் இலஞ்சி ஆரணியம் கண்ணகை அம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதியும், தீர்த்தத் திருவிழா 20 ஆம் திகதியும் நடைபெறும். (ஐ-3)

★ ★ ★

நவாலி அட்டகிரி ஸ்ரீகந்த சுவாமி தேவஸ்தான வருடாந்த உற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. (ஐ-100)

★ ★ ★

யாழ். நகர பஸ் நிலையப் பகுதியில் உள்ள ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் புதிய வசந்த மண்டப கும்பாபிஷேகமும், அந்தரீதபிராயச்சித்த கும்பாபிஷேகமும் இன்று திங்கட்கிழமை காலை 9-05 மணி தொடக்கம் 9-48 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளன. (ஐ-135)

★ ★ ★

அளவெட்டி பெருமாக்கடவை பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு தேர்த் திருவிழா நடைபெறும் (ஐ)

★ ★ ★

கல்வியங்காடு ஸ்ரீவீரபத்திரர்சுவாமி ஆலய புதிய தேர் தரிப்பு மண்டபம் அமைப்பதற்கான ஆரம்பவேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

தேர் தரிப்பு மண்டப கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டலும் கடந்த வெள்ளிக்கிழமை ஆலய முன்றலில் நடைபெற்றது. (ஐ-4)

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேக விழா இன்று திங்கட்கிழமை காலை 6.30 மணி முதல் 7.00 மணி வரை நடைபெற உள்ளது. (ஐ - 152)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் புகையிரத நிலைய ஒழுங்கையில் சகல வசதிகளும்கொண்ட வீட்டை உள்ளடக்கிய 6 பரப்புக் காணியும், கண்டி வீதி, சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியில், '20' பரப்பு மேட்டுக் காணியும், பகுதியாகவோ, ஒருமித்தோ விற்பனைக்குண்டு. தொடர்பு: ஞா.குமாரசாமி, காளிகோயிலடி, டச்சுவீதி, சாவகச்சேரி. (சி/898)

**விற்பனையாகிறது**

சு. பத்மராஜன் வணிக புள்ளி விவரவியல் பகுதி- 11 விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி/883]

**நாடகம் எழுதுவது எப்படி?**

வீரகேசரியில் 'யாழ்ப்பாணத்தில் அந்த ஆறுமாதங்கள்" கட்டுரையை எழுதுகின்ற அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் நாவல் 'அக்கரைச் சீமையில்' ரூபா 25, நாடகம் எழுதுவது எப்படி? நூல் ரூபா 50. [47544]

## லயன்ஸ் கொடிவார ஆரம்ப நிகழ்வு

சாவகச்சேரி. ஜூன் 9

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் கொடித்தின ஆரம்ப விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 9-30மணிக்கு சாவகச்சேரி நவீன சந்தை நுழைவாயில் மண்டபத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் இ. கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி வ. சின்னப்பு கலந்து கொள்வார்.

இக்கொடிவாரத்தில் பொதுமக்கள் தம்மால் இயன்ற நிதி உதவியை லயன்ஸ் கழகத்திற்கு வழங்குமாறு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் வேண்டியுள்ளது. (ஐ-31)

## தென்மராட்சி அதிபர்கள் கூட்டம்

சாவகச்சேரி, ஜூன் 9

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று திங்கள் பிற்பகல் 1.30மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக தென்மராட்சிக் கல்விக் கோட்ட பிரதிக்கல்வி அலுவலர் இ. கணேசன் தெரிவித்துள்ளார். (ஐ-31)

## முன்பள்ளிகளில் தண்ணீர்த் தொட்டிகள்

சாவகச்சேரி - ஜூன் 9

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள இரண்டு முன்பள்ளி மாணவர்களின் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்கும் பொருட்டு "யூனிசெவ்" நிறுவனத்தால்கடந்த வாரம் இரண்டுதண்ணீர்த் தொட்டிகள் வழங்கப்பட்டன.

இணுவில் கந்தசாமி கோயில் இளம் தொண்டர் சபை முன்பள்ளிக்கும் சங்குவேலி சிறுவர் பாடசாலைக்குமே தண்ணீர்த்தொட்டிகள் உடுவில் பிரதேச செயலகத்தினூடாக 'யூன்செவ்' நிறுவனத்தால் வழங்கப்பட்டன. (ஐ - 152)

---

ஓம் சக்தி

## பட்டமளிப்பு

கோண்டாவில் கிழக்கு
அருள்மிகு ஸ்ரீ பார்வதி அம்மன்
பரிபாலன சபையினர் சார்பில்
கோண்டாவில் கிழக்கு நாராயணன் வீதியைச் சேர்ந்த
செல்வன் மாணிக்கம் தர்மகுமார்
(ஆட்ஸ் தர்மன்)
அவர்களின் கலைத்திறனைப் பாராட்டி

★ ஒவியச் செல்வன் ★

என்னும் பட்டம்
ஓவியச்சுடர்மணி, ஓவியப் பொன்மனச் செம்மல்
திருவாளர் பெரியதம்பி சுப்பிரமணியம்
(மணியம் ஆட்ஸ்)

அவர்களால் 08 - 06 - 1997 ஞாயிற்றுக்கிழமை அன்று வழங்கப்பட்டது.

இவ் வைபவத்திற்கு சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொ. அமிர்தராஜா
செயலாளர்.
ஷெ பரிபாலனசபை

(47693)

---

மங்களகரமான

## திறப்புவிழா

நிகழும் ஈசுர வருடம் வைகாசித் திங்கள் 26ஆம்நாள்
இன்று (09 - 06 - 1997) திங்கட்கிழமை
நண்பகல் 12-00 மணிக்கு வரும்
சுபமுகூர்த்த நல் வேளையில்

★ அன்னம்ஸ் ★

(ரேடியோ, மணிக்கூடு வகைகள், விளையாட்டுப் பொருள்கள் மற்றும் அழகுசாதனப் பொருள்கள் விற்பனையாளர்)
இல. 114, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்ற முகவரியில் திறந்து வைக்கப்படுகின்றது. வாடிக்கையாளர், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'அன்னம்ஸ்'

(47694)

---

யாழ். மாவட்ட
விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல்
நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின்
சமாசம்

## அறிவித்தல்

நாட்டரிசி, உழுந்து, உழுத்தம்பருப்பு, வாளி. தேயிலை, தவிடு, கடலைப்பருப்பு, வெந்தயம், நற்சீரகம், சோம்பு, சோளன், கௌபீ, சர்க்கரை, சிந்தாமணிக்கடலை, நிலக்கடலை, புளி, பாக்கு, வெள்ளை எள்ளு ஆகிய பொருள்கள் மொத்த விலையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் தனியாருக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் விற்பனைக்குள்ளன. கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்.
யாழ். மா. வி. உ. ச. நு. கூ. ச. சமாசம்

இல. 111, பிரதானவீதி,
யாழ்ப்பாணம்.
1997 - 06 - 03.

(சி/899)

---

யா/ கோண்டாவில்

## பரஞ்சோதி வித்தியாலயம்
## பரிசளிப்புவிழா -09-06-97

காலை 10.00 மணிக்கு

தலைவர்:
அதிபர் திரு. எஸ். சண்முககுமார்

பிரதமவிருந்தினர்:
கௌரவ திரு. வ. தானையா அவர்கள்
கோட்டங்களின் பிரதிக்கல்விப் பணிப்பாளர்
(நல்லூர்/ யாழ்./ தீவகம்)

அதிபர், ஆசிரியர், மாணவர்
பாடசாலை அபி. சங்கம்

(47651)

---

தென்மராட்சிப் பகுதியில்

## வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றியீட்டியோருக்குப் பரிசில்கள்

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் - கிராம சேவை அலுவலர் பிரிவு ரீதியாக நடத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட 3 போட்டியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

போட்டியாளர்கள் 21 பேருக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டன.

பரிசளிப்பு நிகழ்வு கடந்த வெள்ளியன்று தென்மராட்சி பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

வதிவிட விவசாயப் போட்டிகளில் பங்குபற்றிய எல்லா 25 விவசாயிகளுக்கும் - இலவசமாக மண்வெட்டிகள், கிருமிநாசனி தெளிகருவிகள், வாளிகள் என்பன வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் விவசாயப் பணிப்பாளர், விவசாயப் போதனாசிரியர்கள், கமநல சேவை உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ - 31)

## மட்டுவில் வடக்கில் இன்று இலவச மருத்துவப் பரிசோதனை

சாவகச்சேரி, ஜூன் 9

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும், சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் இணைந்து மட்டுவில் வடக்கு சபீனா பாலர் பாடசாலை மண்டபத்தில் இன்று திங்கள் காலை 9 மணிக்கு பொது மக்களுக்கு வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இப் பரிசோதனையில் நீரிழிவு, வாய்ப்புற்று நோய், கண்பார்வை போன்ற நோய்கள் பரிசோதிக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் வைத்திய கலாநிதி செல்வி உ. சிவபாதசுந்தரம் (பல் வைத்திய நிபுணர்), வைத்திய கலாநிதி-டாக்டர் சி. அருளானந்தம், சாவகச்சேரி நகர சுகாதார பரிசோதகர் எஸ். கிளின்ரஸ் வைத்திய கலாநிதி டாக்டர் பே. பிலிப்ஸ், மட்டுவில் சுகாதார பரிசோதகர் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-31)

## மரக்கறி வகைகள் விலை அதிகரிப்பு

வலிகாமம் தெற்கு, ஜூன் 9

குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலை மீண்டும் உயர்ந்து செல்கிறது.

பத்துரூபா வரை விற்று வந்த மரக்கறிகள் யாவும் 25ரூபாவரை விலை உயர்ந்து காணப்பட்டன.

பயற்றங்காய் ஒருகிலோ அறுபது ரூபாவாக மருதனார் மடம் சந்தையில் விற்கப்பட்டது.

அதேபோல பாவற்காய், வெண்டிக்காய், பூசனிக்காய், முருங்கைக்காய் போன்றனவும் பச்சைமிளகாய், வெங்காயம் போன்றனவும் விலை அதிகரித்துள்ளன.

இதேவேளை பழவகைகள் விலை வீழ்ச்சி கண்டுள்ளன. மாம்பழம் 2 ரூபா முதல் 7 ரூபா வரை விற்கப்படுகிறது. பாலாப்பழம், வாழைப்பழங்களின் விலைகளும் குறைந்துள்ளன. (ஐ-152)

ஜேர்மன் நிறுவனத்தின் உதவியில்

## குடிப்பதற்கு என வழங்கும் நீர் ஆஸ்பத்திரியில் வீண் விரயம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள், பார்வையாளர்கள் நலன்கருதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் ஜீ.ரி. இசற் எனப்படும் நிறுவனம் ஆஸ்பத்திரிக்கு குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டுள்ளது தெரிந்ததே.

மக்களின் நலன் கருதி குடிப்பதற்கு மட்டும் வழங்கப்படும் இந்த தண்ணீரைப் பலர் முகம், கை, கால்கள் கழுவி வீண் விரயம் செய்கின்றனர்.

கழுவுவதற்கும் பிற தேவைகளுக்கும் புறம்பாகத் தாராளமாக நீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஆனால் சம்பந்தப்பட்டோர் இந்த குடிதண்ணீரை அதற்காகப் பாவிப்பது குறித்து கவலை தெரிவிக்கப்படுகிறது. (ஐ-15)

---

உடுப்பிட்டி

## அமெரிக்கன் மிஷன் கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

பேராசிரியர்
அ. துரைராசா அவர்களின்
3 ஆவது நினைவஞ்சலிக் கூட்டம்

இடம்: உடுப்பிட்டி அ. மி. கல்லூரி
காலம்: 11 - 06 - 1997 புதன்கிழமை
மு. ப. 10.00 மணி

தலைவர்: Dr. மு. தங்கராசா B.V.Sc.,M.Sc.
நினைவுப்பேருரை:
கலாநிதி நா. ஞானகுமாரன்
B.A , M.A.,Ph.D.
(தலைவர் நுண்கலைத்துறை/யாழ். பல்கலைக் கழகம்)

"சைவசித்தாந்தத்தில் அத்துவிதம்"

பேராசிரியரின் நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்.
உ.அ.மி. கல்லூரி பழைய மாணவர் சங்கம்.

(47705)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நிமிர்த்தவே முடியாது!

அரசாங்க ஊழியர்களுக்கு அடுத்த ஆண்டு தொடக்கம் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு கிடைக்கமாட்டாது. அடுத்த வருடத்தில் அரசாங்கப் பணிமனைகளுக்கு வாகனங்களோ, தளபாடங்களோ கொள்வனவு செய்ய முடியாது.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட இருக்கும் 1998 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையைக் குறைப்பதற்கான சிக்கன நடவடிக்கைகளில் இவையும் அடங்குமாம்.

வரவு - செலவில் துண்டு விழும் தொகையைச் சரிக்கட்டுவதற்காக பொருள்களின் விலைகளை உயர்த்துவது, புதிய வரிகளை விதிப்பது போன்ற வழமையான நடைமுறைகள் இறுதியில் பொதுமக்களின் தலைகள் மீதே சுமையை ஏற்றுவது உண்டு. அதனால் அரசு தனது செலவீனங்களைச் சுருக்கிக்கொள்வது ஓரளவு மேலானது தான்.

அரசாங்கத்தின் நிதி என்பது மக்களிடமிருந்து நேரடியாகவும், மறைமுகமாகவும் பெறப்படும் - கறக்கப்படும்- பணமே. ஆனால் அரச உயர்அதிகாரிகள் அது கடலில் இருந்து அள்ளப்படும் தண்ணீர் என நினைத்து வீண் விரயம் செய்கின்றனர்; அல்லது தமது ''பொக்கெற்''றுக்களில் போட்டுக்கொள்கின்றார்கள்; சூறையாடுகின்றார்கள்.

அரசியல்வாதிகளும் பொதுமக்களின் பணத்தில் பல வசதிகள், சலுகைகள் என்று உல்லாசம் அனுபவிக்கிறார்கள். மக்களுக்கு சேவை செய்வதற்கான கிம்பளங்களாக இவை கருதப்படுகின்றன.

இவற்றுக்கும் மேலாக அரசியல்வாதிகளும், அரச உயர் அதிகாரிகளும், ஊழல் மோசடி ஊடாகவும் வெளியில் தெரியாமலே, கணக்கில் சேர்க்காமலே, அரச பணத்தை, மக்கள் பணத்தை முழுங்கிவிடுகிறார்கள். அதனை நிறுத்தினால். தடுத்தால் துண்டு விழும் தொகையைக் கணிசமான அளவு குறைத்துவிடலாமே.

அரசாங்கத்தின் செலவுகளைக் குறைக்க வேண்டிய அளவுக்கு துண்டு விழும் தொகை வருடாந்தம் புடைத்துப் போவது ஏன் என்பது ஆய்வுக்குரிய கேள்வி.

போர்ச் செலவுகள் வருடாந்தம் வானத்தை நோக்கி உயர்ந்து செல்வது தான் துண்டு விழும் தொகை அதிகரித்துச் செல்வதற்குப் பிரதான காரணம். போரை நிறுத்தி துண்டு விழும் தொகையைக் குறைத்து, மக்கள் மீதான பளுவைக் குறைக்கலாமே! சிக்கனச் செலவு என்ற கொள்கை இராணுவச் செலவுக்குமட்டும் விதிவிலக்கப்பட்டிருப்பது ஓர் உண்மையை அழுத்திக் கூறுகிறது.

போர் இந்த ஆண்டோடு நிறுத்தப்பட மாட்டாது. அடுத்த ஆண்டிலேனும் அதனைக் கைவிடும் எண்ணம் அரசுக்கு இல்லை என்பதற்கான முத்தாய்ப்பே சிக்கனச் செலவு என்ற பாட்டு!

எத்தனை சிக்கனச் செலவுத் திட்டங்களை நடைமுறைப் படுத்தினாலும், போரை நிறுத்தாமல் நாட்டின் பொருளாதாரத்தையும் மக்களின் வாழ்க்கை நிலையையும் நிமிர்த்த முடியாது. இதனை அரசுக்கு இடித்துச் சொல்ல யார் இருக்கிறார்கள்?

# பொருளாளர் நியமனம் குறித்து ஐ.தே. கட்சிக்குள் அதிருப்தி

கொழும்பு, ஜூன் 9

ஐ. தே. கவின் பொருளாளராக மில்ரோய் பெரேரா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளமை ஐ.தே.கட்சிக்குள் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.தே.கவின் பொருளாளராக இருந்த கே. கணேசலிங்கம் ஐ. தே. கவில் இருந்து ராஜினாமாச் செய்த நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மில்ரோய் பெரேரா என்ற புதிய முகம் ஒருவரை ஐ. தே.க. தலைவர் ரணில் தெரிவு செய்துள்ளார்.

இளவயதினராக இவர் இருப்பதாலும் — கட்சியின் செயற்பாடுகளில் இவர் பெரிய அளவில் பங்கு பற்றாததாலும் — கட்சி உறுப்பினர்களிடையே அதிருப்தி நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம் — கடந்த வாரம் இடம்பெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் புதிய பொருளாளரை ரணில் ஏனையோருக்கு அறிமுகம் செய்து வைத்தார். (இ-150-3)

# கட்டுநாயக்கா விமான நிலைய ரகசியப் பொலீஸ் பிரிவுக்கு மூடுவிழா

## ஊழல்கள் இடம்பெற்றதாக குற்றச்சாட்டு

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இயங்கி வந்த இரகசியப் பொலீஸ் பிரிவு உடனடியாக மூடப்பட்டுள்ளதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

அந்தப் பிரிவில் இடம்பெற்றுவந்த ஊழல்களே இந்தப் பிரிவு மூடப்படுவதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படும் 17 பேரை கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக —போலி வீஸா, பாஸ்போர்ட் மற்றும் ஆவணங்களை சமர்ப்பித்து—ஒல்லாந்துக்கு அனுப்பி வைத்த சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்தே இந்தப் பிரிவு மூடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது (இ-150-3)

# முஸ்லிமுக்கான தனி அலகு குறித்து தமிழ்க் கட்சிகள் இணக்கம் இல்லை

## கூட்டணி, மு.காங்கிரஸ் மட்டும் ஆதரவு

கொழும்பு, ஜூன் 9

வடக்கு — கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனி அலகாக தென் கிழக்கில் பிராந்திய நிர்வாக அலகு ஒன்றை உருவாக்க தமிழர் விடுதலைக் கூட்டணியும், முஸ்லிம் காங்கிரஸூம் இணக்கம் கண்டுள்ளன. ஆனால் ஏனைய தமிழ்க் கட்சிகள் இன்னும் இணக்கம் தெரிவிக்கவில்லை.

வடக்கு—கிழக்கில் வடக்கு, திருமலை, மட்டக்களப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாக தமிழர் நிர்வாக அலகும் —

தென்—கிழக்கு. அம்பாறை, சம்மாந்துறை ஆகியவற்றை உள்ளடக்கியதாக முஸ்லிம் நிர்வாக அலகும்— இருக்கத்தக்கதாக இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம்—

இந்த இணக்கம் தொடர்பான ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு ஏனைய தமிழ்க் கட்சிகள் தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் கேட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இ தொ.கா. கட்சி அலுவலகத்தில் தமிழ்க்கட்சிகள் கூடிய சமயம் இக் கோரிக்கை கூட்டணியிடம் விடுக்கப்பட்டது.

இந்த இணக்கம் குறித்து தாம் அறியவும்—

அதன் பலாபலன்கள் குறித்து விவாதிக்கவும்— இந்த ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு அவை கோரின.

இதற்கு முதல் நாளான வியாழக்கிழமை தமிழ்க்கட்சிகள் ஐ. தே. க. பிரமுகர்களுடன் பேச்சு நடத்திய அமைச்சர் பீரிஸூம் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பின் போது தென்கிழக்கு பிராந்திய நிர்வாக அலகு தொடர்பாக சகல தமிழ்க்கட்சிகள் மத்தியிலும் இணக்கம் ஏற்படாததாலேயே அடுத்த நாளான வெள்ளிக்கிழமை இ. தொ. கா. அலுவலகத்தில் தமிழ்க் கட்சிகளின் சந்திப்பு இடம் பெற்றது. (இ-3-21-150)

# வெளியேற உத்தரவு

வவுனியாவில் பூந்தோட்டம், மண்டபம் ஆகிய இடங்களில் உள்ள இரு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களை ஒரு மாத காலத்துக்குள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று விடுமாறு படையினர் கோரியுள்ளனர்.

இந்த அறிவிப்பால் அந்த முகாம்களில் இருந்தவர்களிடையே குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது(இ-150-3)

# நிலக்கண்ணி கண்டுபிடிப்பு

மட்டக்களப்பு மாவட்டம், சத்துருக்கொண்டான் பிள்ளையாரடி வீதியில் 30 கிலோ எடை உள்ள சக்தி வாய்ந்த நிலக்கண்ணி ஒன்றைப் பாதுகாப்புப் படையினர் நேற்று கண்டுபிடித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சத்துருக்கொண்டான் பிள்ளையாரடி வீதியை இராணுவத்தினரும் பொலீஸாரும் அடிக்கடி பயன்படுத்துவது வழக்கமாகும். (இ-5)

# அச்சுவேலி பொதுச்சந்தை கடைகள்

அச்சுவேலிப் பொதுச் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள வியாபார நிலையங்கள் அடுத்த மாதத்தில் இருந்து இயங்க ஆரம்பிக்கும்.(இ-11)

# அசாம் முதல்வர் தப்பினார்

இந்தியாவின் அசாம் மாநில முதலமைச்சர் நேற்று படுகொலை முயற்சி ஒன்றில் இருந்து மயிரிழையில் தப்பினார்.

முதலமைச்சர் பிரபுல்ல குமார் மஹந்தாவும் அவரது உதவியாளர்களும் பயணம் செய்த வாகனம் தலைநகரமான கௌகாத்திக்கு அருகேயுள்ள வீதியொன்றில் சிறிய பாலமொன்றினைத் தாண்டிச் சென்ற இரண்டொரு வினாடிகளில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது. (இ-5)

# இலங்கையின் 50 ஆம் சுதந்திரதின கொண்டாட்டங்களில் கிளின்ரன்?

கொழும்பு, ஜூன் 9

அடுத்தவருடம் பெப்ரவரி மாதம் கொண்டாடப்படும் 50 ஆவது சுதந்திரதின கொண்டாட்டங்களுக்கு வெளிநாட்டுத் தலைவர் ஒருவரை பிரதம விருந்தினராக அழைக்க இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பிரதம விருந்தினராக அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரனையும் அவரது துணைவியாரையும் அழைக்க அரச மட்டத்தில் ஆராயப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-150-3)

# பிரதிப் பொலீஸ் மா அதிபரின் பொறுப்பில் பிடிபட்ட பகுதிகள்

கொழும்பு, ஜூன் 9

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையில் படையினர் கைப்பற்றும் பகுதிகளை தக்க வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பொலீஸாருக்கு பொறுப்பாக அதிரடிப் படை கொமாண்டோ பொலீஸ் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபரான லயனல் கொடித்துவக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

அப்பகுதியில் பணியாற்றும் பொலீஸாரின் நலன்களை கவனிப்பதும், பொலீஸாரை மேற்பார்வை செய்வதும் அவரின் பணியாகவிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-150-3)

# பீரிஸூக்கு மட்டும்தான் அரசியல் தீர்வில் அக்கறை

## ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 9

''அரசாங்கத்தில்அங்கம் வகிப்பவர்கள் யுத்தம் தொடர வேண்டும்என்ற மனப்பான்மையுடனேயே இருக்கிறார்கள்.''

இப்படி ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதேநேரம் [illegible] அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மட்டுமே அரசியல் தீர்வு யோசனைகளை அமுல் செய்வதில் தீவிரம் காட்டி வருகிறார் — என்றும் ரணில் கூறினார். (இ-150-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற அமர்வு தொலைக்காட்சியில்

கொழும்பு, ஜூன் 9

நாடாளுமன்ற அமர்வுகளை நேரடியாகத் தொலைக்காட்சியில் காண்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை சபாநாயகர் கே.பி. ரத்நாயக்கா தலைமையில் நடந்த கட்சிப் பிரதிநிதிகளின் கூட்டத்தில் இதுபற்றி முடிவு எடுக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் நடக்கும் அமர்வுகளை மக்கள் தொலைக்காட்சியில் நேரடியாகப் பார்க்கும் நடைமுறை உலகில் பல நாடுகளில் உள்ளது என்றும் —

அந்த நடைமுறை இங்கும் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் — கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இக் கோரிக்கையைச் சகல அரசியற் கட்சிகளும் ஏற்றுக் கொண்டன.

(இ-3-150)

# ஹிஸ்புல்லாவின் கருத்தால் முஸ்லிம் காங்கிரஸூக்குள் பரபரப்பு

கொழும்பு, ஜூன் 9

''அடுத்து ஆட்சிக்கு வருவது ஐ. தே. கட்சியே. அதில் முஸ்லிம் காங்கிரஸூம் அங்கம் பெறும்'' என்று தொலைத் தொடர்பு பிரதி அமைச்சர் எம். எச். எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளதாகக் கூறப்படும் கருத்துத் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தற்சமயம் ஈரான் சென்றுள்ள பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா நாடு திரும்பியதும் இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைமை அவரிடம் விளக்கம் கோரும் என்று தெரிவிக்கப்பட்டது.

அரசில் அங்கம் வகித்துக் கொண்டு இப்படிப் பேசியது நியாயமான விடயம் அல்ல என்று கட்சிப் பிரமுகர்கள் கவலை வெளியிட்டனர் என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-150-3)

### நாளை

வைகாசி 27
செவ்வாய்க்கிழமை
திதி: பஞ்சமி
பிற்பகல் 4.51 வரை:
நட்சத்திரம்: ஆயிலியம்
பின் இரவு 1.18 வரை.
சுபநேரம் : 10.22-11.52
ராகுகாலம்:2.52 -4.22
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# மன்னார் வரும் அகதிகள் பலர்

# தொற்று நோய்களால் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 9

வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்காக மன்னார் வரும் அகதிகள் வாந்திபேதி, மலேரியா ஆகிய நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நோய்களினால் பீடிக்கப்பட்டவர்களால் பேசாலை வைத்தியசாலை நிரம்பி வழிவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வன்னியில் இருந்து அகதிகள் உயிலங்குளம் ஊடாக கிழமையில் மூன்று நாள்களுக்கு மன்னாருக்குள் வர அனுமதிக்கப்படுவதால் ஏராளமானவர்கள் உயிலங்குளத்துக்கு வருவதாகவும் —

அவர்கள் உயிலங்குளத்தில் வைத்து சோதனை செய்யப்பட்ட பின்னர் அகதிகளுக்கான ஐ. நா. தூதரத்தின் பொறுப்பில் உள்ள முகாம்களிலும், காட்டு ஆஸ்பத்திரியிலும் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-3-150)

## பனை, தென்னைவள சங்கம் ஈ.பி.டி.பியுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாணம் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தூதுக்குழு ஒன்று, நேற்று ஈ. பி. டி. பி. பணிமனையில் ஈ. பி. டி. பி. யின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் கே. வி. கே. ஜெகனைச் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடியது.

பிரஸ்தாப சங்கத்தின் பொது முகாமையாளர் அ. செல்வராஜா தலைமையில் 22 பேர் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

★ வேலையில்லாப் பிரச்சினை.

★ கசிப்பு உற்பத்தியால் கள் உற்பத்தியாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள்.

★ பதிவுசெய்யாதோர்யாழ். மாநகர சபைக்குள் களவாக கள் கொண்டுவருவதால் ஏற்பட்டுவரும் பாதிப்புக்கள்.

★ கலாட் பகுதியினரின் அசமந்தப் போக்கினால் சட்ட விரோத கள் விற்பனை அதிகரிப்பு

★ படையினரால் கள் சீவுவோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்.

ஆகியவை உட்பட பல்வேறு விடயங்கள் தூதுக்குழுவினரால் இந்த சந்திப்பின் போது பிரஸ்தாபிக்கப்பட்டன.

நாவாந்துறையில் சங்கக் கிளைகளை அமைக்க எதிர்ப்புக் காட்டப்படுவதாகவும் தூதுக்குழுவினர் தெரிவித்தனர்.

தூதுக்குழுவினரின் கோரிக்கைகள் குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக ஜே. வி. கே. ஜெகன் உறுதி அளித்தார். (இ)

## கதிர்காமர்...

(முதலாம் பக்கத் தொடர்)

தொடர்பாக அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து ஆராயும் வகையில் ரணில் விக்கிரமசிங்கவை பிரிட்டனின் புதிய அரசு லண்டனுக்கு அழைத்திருந்தது.

கொழும்பில் உள்ள தமது தூதுவர் மூலம் பிரிட்டிஷ் அரசு விடுத்த அழைப்பின் பேரில் ரணில் லண்டன் சென்றுள்ளார்.

வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் கட்டாக் செல்லும் வழியில் தற்சமயம் லண்டன் சென்றுள்ளார்.

அவர் அங்கு ஸ்கொட்லாந்தில் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கம் கொண்டுள்ள திட்டங்கள் பற்றியும் — இலங்கை அரசின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் பற்றியும் — ஸ்கொட்லாந்து அமைச்சர்களுடன் கருத்துப் பரிமாறிக் கொண்டனர்.

இந்த இருவரும் தற்பொழுது லண்டனில் ஒரே சமயம் நிற்பதாலேயே புலிகள் பிரதிநிதிகளைச் சந்திக்கக் கூடும் என்று பேச்சு அடிபடுகிறது. (இ-3)

## 6புலிகள் களப்பலி என தெரிவிப்பு

கடந்த இரு தினங்களாக படையினருடன் நடந்த மோதலில் 6 போராளிகள் களப்பலியானதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

ஓமந்தை பனிச்சநீராவி என்னும் இடத்தில் வெள்ளிக்கிழமை நடந்த மோதலில் பரணீதரன் (பழனிராசன்)— யாழ்ப்பாணம்.

தோணமலை (பொன்னையா சுதாகர்) — யாழ்ப்பாணம்.

மலர்அன்பன் (கந்தசாமி செந்தூரன்)—வவுனியா ஆகியோரும்—

சனியன்று விளக்குவைத்த குளத்தில் இடம்பெற்ற மோதலில் ஈழவாணன் (நல்லசாமி பரந்தாமன்) — திருமலை.

ஆழிக்குமரன் (இராசேந்திரம் சுதாகர்)—யாழ்ப்பாணம்

தவயோகன் (அருளம்பலம் அருள்சோதி)— யாழ்ப்பாணம் ஆகியோரும்— களப்பலியானதாக புலிகள் அறிவித்துள்ளனர்: (இ-164-3)

## கனடா கார் விபத்தில்

# கொக்குவிலைச் சேர்ந்த தந்தையும் மகளும் பலி!

கொழும்பு, ஜூன் 9

கனடாவில் நிகழ்ந்த கார் விபத்து ஒன்றில் கொக்குவிலைச் சேர்ந்த தந்தையும் மகளும் பலியாகி உள்ளனர்.

சீநோர் நிறுவனத்தின் முன்னாள் பொது முகாமையாளர் டி. யுகேந்திரனும் அவரது மகள் தர்சிகாவுமே மரணமானவர்கள் ஆவர். அவர்கள் பயணம் செய்த கார் பள்ளம் ஒன்றில் வீழ்ந்து தீப்பிடித்து எரிந்ததாகவும் —

காரிலிருந்த இருவரும் கருகி இறந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

அதே வேளை — அங்கு இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் சூராவத்தையைச் சேர்ந்த சிவலிங்கம் செல்வநாயகம் என்பவர் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-21)

## கப்பலால்...

(முதலாம் பக்கத் தொடர்)

பாதை ஊடாக போர் முனைக்கு அனுப்பப்படுகின்றன.

இத்தகைய ஆயுதங்கள் கிடைத்த பின்பே படையினர் தமது 2ஆவது கட்ட நகர்வை வன்னியில் ஆரம்பித்தனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது (இ-150-3)

## 2 படை அணிகளும்..

(முதலாம் பக்கத் தொடர்)

சமயம் படையினர் முன்னேறுவதாகவும்—

புளியங்குளம் சந்தியை அப்படையணி அடைய இன்னும் 8 கிலோ மீற்றர் தூரம் செல்லவேண்டும் என்றும்— அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஓமந்தையில் இருந்து முன்னேறும் படையணி புளியங்குளம் சந்தியை அடைய இன்னும் 5 கிலோ மீற்றர் தூரம் வரை செல்ல வேண்டும் என்றும் — அந்த அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-150-3)

## மாங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

கந்தசாமி செல்லர் (32வயது)—பெரிய கொலனி, மாங்குளம்.

நல்லதம்பி குணமாலை (66 வயது) — மாங்குளம்.

மாணிக்கம் சரவணமுத்து (34 வயது)—மாங்குளம்.

தரகு பத்மலிங்கம் (21வயது) — 132 ஆம் கட்டை, மாங்குளம்.

பாலசுப்பிரமணியம் ஜெயக்குமார் (20 வயது) — மாங்குளம்.

செபமாலை லோஜிதா (64 வயது) — ரயில் நிலைய வீதி, மாங்குளம்.

திருஞானம் மனோகரன் (24 வயது) — யாழ். வீதி, மாங்குளம்.

ஐயாத்துரை பரமேஸ்வரன் (56 வயது) — மாங்குளம்.

சேவியர் மனோரஞ்சிதம் (36 வயது) — முல்லை வீதி, மாங்குளம்.

சேவியர் வத்சலா (5வயது) — முல்லை வீதி, மாங்குளம்.

முருகன் ராசதுரை (63 வயது) — ஆயிரம் வீட்டுத் திட்டம், மாங்குளம்.

தர்மதாசா சிவமங்களம் (36 வயது)— பூவரசங்குளம்.

மா. சரவணமுத்து (52 வயது) — மாங்குளம்.

(இ-164-3)

## தளுவத்தவுக்கு ஜெனரல் பதவி

கொழும்பு, ஜூன் 9

தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றொஹான் தளுவத்தவுக்கு ஜெனரல் பதவி கிடைக்கும் அதிர்ஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இராணுவத் தளபதியாக இருப்பவருக்கு ஜெனரல் பதவி வழங்குவது தொடர்பாக அரசாங்க உயர் மட்டத்தில் ஆராயப்பட்டுள்ளதாகவும் —

4 நட்சத்திரப் பட்டியுடன் இப்பதவியை வழங்கச் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்படுகிறது;

அதேநேரம் — இராணுவத்தில் உள்ள சிரேஷ்ட பிரிகேடியர்களை மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்த்துவது தொடர்பான திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## சிறுநீரக தானம்

சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நிலையில் ஆசிரியர் ஒருவர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆகவே அவருக்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை அவசரம செய்ய வேண்டியிருப்பதால், இவருக்கு உதவி செய்ய விரும்புவோர் 'O+'குறாப் இரத்தப் பிரிவைச் சேர்ந்தோர் எவராவது தானம் செய்து அவரின் உயிரிரைப் பாதுகாப்பதற்கு உதவி புரியும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தானம் செய்பவர்க்கு அவரின் நலனைப் பாதுகாப்பதுடன், தகுந்த சன்மானமும் வழங்கப்படும். தொடர்பு கொள்ள விரும்புவோர், விரைவாகத் தொடர்பு கொள்வது விரும்பத்தக்கது.

தொடர்பு:-

ப. யோகநாதன் (C.T.P)
புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

(47710)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
திருமதி சுமதி கருணாகரன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி தவமணி கிஷ்னசாமி

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

குடிசார் பொறியியல்துறை
3ஆம் வருட மாணவர்கள்,
யாழ். தொழில்நுட்பக் கல்லூரி,
கொக்குவில்.

(47709)

## விமானம், ஹெலிகள் பெரியமடுவில் தாக்குதல்

கொழும்பு, ஜூன் 9

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் வன்னிப்பிரதேசத்தில் உள்ள பெரிய மடுவில் மேலும் ஒரு கிலோமீற்றர் தூரம் முன்னேறியுள்ளனர் என்றும்—

இப்பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது விமானப்படையினர் தாக்குதல் நடத்தியதாகவும், கிபிர் விமானங்கள் எம். ஐ. -24 ஹெலிக்கொப்டர்கள் பயன்படுத்தப்பட்டதாகவும்— பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பிரதேசத்தில் நேற்று விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து அதிக எதிர்ப்பு இருக்கவில்லை என்றும் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் கடும் எதிர்ப்புக் காட்டினர் என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் தெரிவித்தது.

யாழ்ப்பாணத்துக்கான வீதியைப் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு மேலும் 60 கிலோ மீற்றர் தூரம் முன்னேற வேண்டும்: இதனைச் செய்வதற்கு பல வாரங்கள் ஆகலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## திருமலை அல்லது யாழ்ப்பாணத்தில் தாக்குதல் நடத்த புலிகள் திட்டம்

## புலனாய்வுத் தகவல்தெரிவிப்பு

வன்னியில் இராணுவ நடவடிக்கை தீவிரமாகி வரும் இந்நேரத்தில், விடுதலைப் புலிகள் திருகோணமலை, யாழ்ப்பாணம் பகுதிகளில் தாக்குதல் நடத்தத் தயாராகி வருவதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

திருமலைக்குத் தெற்கே தாக்குதல் நடத்த கடற்புலிகள் அங்கு திரள்வதாகவும் —

யாழ்ப்பாணத்தில் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தும் வகையில் புலிகளின் ஊடுருவல் அதிகரித்துள்ளதாகவும் — புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்)

றப்படவிருக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

ரத்தினசிறி விக்கிரமநாயக்காவிடமிருந்து சுதேச வைத்தியத் துறையும் —

அனுருத்த ரத்வத்தையிடம் இருந்து நீர்ப்பாசனத் துறையும் — பறிக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

சகல அமைச்சர்களையும் இன்று காலை அலரி மாளிகைக்கு வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

புதிய அமைச்சர்களுக்கு இன்று பதவிப்பிரமாணமும் செய்து வைக்கப்படும்:

(இ-3-21)

## விடுதலையான...

(முதலாம் பக்கத் தொடர்)

யிடமுடியும் என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலை செய்யப்பட்டு இங்கு வருவோரின் அடையாள அட்டை வீடுகளில் இருந்தால் அதனையும் எடுத்து வருமாறு ஈ.பி.டி.பி. அமைப்பு கோரி உள்ளது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09 06-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org